வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி 01.02.2026 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

- 2026-27ஆம் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டை, நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் இன்று மக்களவையில் தாக்கல் செய்தார்.
- வரும் 2047ஆம் ஆண்டிற்குள், வளர்ந்த இந்தியாவை நோக்கிய நாட்டின் பயணத்திற்கு, இந்த பட்ஜெட் அடித்தளமாக இருக்கும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- குரு ரவிதாசின் போதனைகள், நாட்டின் சமூக நெறிமுறைகளுக்கு, உத்வேகம் அளித்து வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி புகழாரம் சூட்டி உள்ளார்.
- இந்திய கடலோரக் காவல் படையின் 50ஆவது நிறுவன தினம், இன்று கொண்டாடப் படுகிறது.

---

*பட்ஜெட் 1 (19)*

2026-27ஆம் நிதியாண்டிற்கான பட்ஜெட்டை, மக்களவையில், மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் இன்று தாக்கல் செய்தார். மத்திய அரசின் நலத் திட்டங்களால், கடந்த 10 ஆண்டுகளில், 25 கோடி மக்கள் வறுமையில் இருந்து விடுபட்டுள்ளதாக, தெரிவித்தார். அவர் தமது பட்ஜெட் உரையில், பொது கட்டமைப்பிற்கு மூலதன நிதியாக 12.2 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்றும், சென்னை, பெங்களூரு உட்பட, நாட்டின் 7 நகரங்களில், அதிவேக ரயில் வழித்தடம் ஏற்படுத்தப்படும் என்றும், கல்வித் துறையை மேம்படுத்தவும், வங்கித் துறையை சீரமைக்கவும், குழு அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நிதியமைச்சராக பொறுப்பேற்ற பின்னர்அவர் கடந்த 9 ஆவது முறையாக பட்ஜெட்டை தாக்கல் செய்துள்ளார். 27 ஆண்டுகளுக்கு பின்னர், ஞாயிற்றுக் கிழமை மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. இந்த பட்ஜெட்டில் பல்வேறு முக்கிய அறிவிப்புகளை அவர் வெளியிட்டார். பாஜக அரசு ஆட்சிக்கு வந்ததில் இருந்து, கடந்த 12 ஆண்டுகளாக நாட்டின் பணவீக்கம் கட்டுக்குள் இருந்து வருவதாக, அவர் தெரிவித்தார். 3 முக்கிய கடமைகளை கனவில் வைத்து, இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். முக்கிய துறைகளில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி, மற்றும், திட்டங்கள் குறித்து அவர் எடுத்துரைத்தார். உற்பத்தியை அதிகரித்து, வேலை வாய்ப்பை உருவாக்கும் திட்டங்களுக்கு மத்திய அரசு முன்னுரிமை

*<u>பட்ஜெட் 2 (13)</u>*

அளித்து வருவதாகவும், பாஜக அரசின் சீரிய நடவடிக்கைகளால், நாட்டின் வளர்ச்சி, 7 சதவிகிமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த பட்ஜெட் மக்கள் நலன், எல்லோருக்கும் எல்லாம், இளைஞர்கள் மேம்பாடு ஆகியவற்றை கருத்தில் கொண்டு, தயாரிக்கப் பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். உயிரி மருத்துவத் துறையில், பயோ ஃபார்மா சக்தி என்னும் திட்டம், 10 ஆயிரம் கோடி ரூபாயில் நிறைவேற்றப்படும் என்றும், நாட்டில், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க, 6 அம்ச திட்டம் உருவாக்கப்படும் என்றும், மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் தமது உரையில் தெரிவித்தார். செமி கண்டக்டர் துறையில் 40 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்படும் என்றும், தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, ஒடிசாவில், அரிய வகை கனிமங்களுக்கான வழித்தடம் அமைக்கப்படும் என்றும், அவர் தெரிவித்தார். இந்திய பொருளாதாரம் நிலையான வளர்ச்சியில் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். பட்ஜெட் குறித்த கூடுதல் தகவல்கள்

(வாய்ஸ்)

*பட்ஜெட் 3 (19)*

(வாய்ஸ்)

கைத்தறி நெசவாளர்களுக்கு புதிய திட்டம் உருவாக்கப்படும் என்றும், சிறு-குறு நிறுவனங்களின் வளர்ச்சிக்கு 10 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் திருமதி நிர்மலா சீத்தாராமன் தெரிவித்தார். காதி, மற்றும், கைவினைப் பொருட்களை ஊக்குவிக்க, மகாத்மா காந்தி கிராம சமாஜ் என்னும் திட்டம் தொடங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். விளையாட்டு சாதனங்களின் உற்பத்தியை அதிகரிக்க புதிய திட்டங்கள் உருவாக்கப்படும் என்றும், கட்டுமான மற்றும் உள்கட்டமைப்பு சாதனங்கள் மேம்பாட்டிற்கு புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும் என்றும் திருமதி நிர்மலா சீத்தாராமன் தெரிவித்தார். விண்வெளித் துறையில் தன்னிறைவை எட்டுவதற்கு, தேசிய திட்டம் உருவாக்கப்படும் என்றும் அவர் கூறினார். ஜவுளித் துறையை நவீனப்படுத்துவதற்கும், வேலை வாய்ப்பை உருவாக்குவதற்கும் திட்டம் வகுக்கப்படும் என்றும் திருமதி நிர்மலா சீத்தாராமன் தமது பட்ஜெட் உரையில் தெரிவித்தார். நாட்டின் கிழக்கு, மேற்கு பகுதியை இணைக்க பிரத்யேக வழித்தடம் அமைக்கப்படும் என்றும், பொது போக்குவரத்திற்கு நாடு முழுவதும் 20 நீர்வழித் தடங்கள் ஏற்படுத்தப்படும் என்றும், 3ஆம் நிலை நகரங்கள், கோவில் நகரங்கள் போன்றவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். சென்னை-பெங்களூரு, சென்னை-ஹைதராபாத் உள்ளிட்ட 7 நகரங்களுக்கு, அதிவேக ரயில் வழித்தடம் ஏற்படுத்தப்படும்

பட்ஜெட் 4 (19)

என்றும், சுற்றுலாத் துறை வளர்ச்சி ஊக்குவிக்கப்படும் என்றும், பொது கட்டமைப்பிற்கு மூலதன நிதியாக, 18.2 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் திருமதி நிர்மலா சீத்தாராமன் தமது உரையில் கூறினார். வருமான வரித் தாக்கல் எளிமைப்படுத்தப்படும் என்றும், புதிய வருமான வரி சட்டம், ஏப்ரல் 1ஆம் தேதி அமலுக்கு வரும் என்றும் அவர்

தெரிவித்தார். அனைத்து துறைமுகங்களையும் இணைக்க, 20 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அன்னிய முதலீட்டாளர்களை ஊக்குவிக்க, நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், வெளிநாடு வாழ் இந்தியர்கள், இந்திய பங்கு சந்தைகளில் முதலீடு செய்ய அனுமதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். நாடு முழுவதும் 5 மையங்களில் மருத்துவ சுற்றுலா வசதி ஏற்படுத்தப்படும் என்றும், இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் ஆயுர்வேத மருந்துகளை ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். கடலோர பகுதிகளில், மீன்பிடி தொழிலை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மீனவ சுயஉதவிக் குழுக்களுக்கு, புதிய திட்டம் கொண்டு வரப்படும் என்றும் அவர் தெரிவித்தார். நாடு முழுவதும், 5 ஆயிரம் நீர்த் தேக்கங்களை மேம்படுத்த திட்டம் தயாரிக்கப்படும் என்றும், வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சிக்கு திட்டம் தயாரிக்கப்படும் என்றும் அவர் கூறினார். விவசாயிகளுக்கு செயற்கை நுண்ணறிவுக் கருவிகள் வழங்கப்படும் என்றும் அவர்

*பட்ஜெட் 5 (9)*

தெரிவித்தார். தேசிய அளவில், 2 மனநல சிகிச்சை மையங்கள் அமைக்கப்படும் என்றும், நிதிப் பற்றாக்குறை 4.5 சதவிகிதத்திற்கும் கீழ் கொண்டு வரப்படும் என, தாம் ஏற்கனவே அளித்த வாக்குறுதி, நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். வரும் நிதியாண்டில், நிதிப் பற்றாக்குறை 4.3 சதவிகிதமாக இருக்கும் என்றும் அவர் கூறினார். நிதியாண்டின் பரிந்துரைப்படி, மாநிலங்களுக்கான நிதிப் பகிர்வு, 1.4 லட்சம் கோடி ரூபாய் விடுவிக்கப்படும் என்றும், நோயாளிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக, 17 மருந்துகள் அல்லது மருந்துகளின் அடிப்படை சுங்கவரி விலக்கு அளிக்கப்படும் என்றும், திருமதி நிர்மலா சீத்தாராமன் கூறினார்.

---------------------------------------

*__பட்ஜெட் ரியாக்ஷன் (7)__*

இந்த ஆண்டிற்கான பட்ஜெட் வரலாற்று சிறப்பு மிக்கது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். வரும் 2047ஆம் ஆண்டிற்குள், வளர்ந்த இந்தியாவை நோக்கிய நாட்டின் பயணத்திற்கு இந்த பட்ஜெட் அடித்தளமாக இருக்கும் என்று, அவர் தெரிவித்துள்ளார். இந்த பட்ஜெட் 140 கோடி இந்தியர்களின் விருப்பங்களை பிரதிபலிக்கிறது என்றும், இந்த ஆண்டு, இந்த பட்ஜெட், புதிய ஆற்றலையும், புதிய உத்வேகத்தையும் வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த பட்ஜெட் மூலம், வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான அடித்தளத்தை உருவாக்கியதற்காக, பிரதமர் திரு. நரேந்திரமோடி, மற்றும், நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் ஆகியோருக்கு, மத்திய அமைச்சர் திரு, அஷ்விணி வைஷ்ணவ் நன்றி தெரிவித்துள்ளார். பட்ஜெட்டில் ரயில்வே துறைக்கு அதிவேக வழித்தடங்களை அமைப்பதற்கான அறிவிப்புகளுக்கும் அவர் பாராட்டு தெரிவித்தார்.

இந்த பட்ஜெட் குறித்து கருத்து தெரிவித்த புதுச்சேரி பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், புதுச்சேரிக்கு பல நன்மைகளை இந்த பட்டெஜட் கொண்டு வருவதாக தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

(வாய்ஸ்-லட்சுமி நாராயணன்)

---------------------------------------

*__பிரதமர் குரு ரவிதாஸ் (10)__*

சமத்துவம், கருணை, மனிதாபிமானம், போன்ற போதனைகளால், நாட்டின் சமூக நெறிமுறைகளுக்கு, உத்வேகம் அளித்து வருபவர் சந்த் குரு ரவிதாஸ் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி புகழாரம் சூட்டி உள்ளார். இதுதொடர்பாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், குரு ரவிதாசின் 649ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, பஞ்சாப் மாநிலத்திற்கு சென்ற பிரதமர், பஞ்சாப்பின் ஆதம்பூர் விமான நிலையத்தில்

தரையிறங்கினார். விமான நிலையத்தின் புதிய பெயரை, ஸ்ரீகுரு ரவிதாஸ் மகராஜ் ஜி விமான நிலையம், ஆதம்பூர் என பிரதமர் அறிவித்துள்ளார். லூதியானாவில் உள்ள ஹல்வாரா விமான நிலைய முனையக் கட்டிடத்தையும் அவர் காணொலி மூலம் அவர் திறந்து வைத்தார்.

---------------------------------------

கடலோரக் காவல் படை - மோடி (8)

இந்திய கடலோர காவல் படையின் நிறுவன தினத்தை முன்னிட்டு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, கடலோரக் காவல் படையினருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், நாட்டில், கடற்கரைகளில் உறுதியான கேடயமாக நிற்பதில், இந்திய கடலோர காவல் படை முத்திரையை பதித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். கடல்சார் பாதுகாப்பு, விரைவான பேரிடர் மீட்பு, மற்றும், கடல்சார் சுற்றுச் சூழல் அமைப்பின் பாதுகாப்பு ஆகியவற்றில், கடலோர காவல் படையின், அசைக்க முடியாத உறுதிப்பாட்டை அவர் பாராட்டினார்.

---------------------------------------

கடலோர காவல் படை 16

இந்திய கடலோரக் காவல் படையின் 50ஆவது நிறுவன தினம், இன்று கொண்டாடப் படுகிறது. கிட்டதட்ட 50 ஆண்டுகால சேவையை இது கடந்துள்ளது. 1977ஆம் ஆண்டில், வெறும் 7 தளங்களுடன் தொடங்கப்பட்ட இந்த கடலோரக் காவல் படை, இன்று 155 கப்பல்கள், மற்றும் 80 விமானங்களை கொண்ட கடல்சார் படையாக, உருவெடுத்துள்ளது. வரும் 2030ஆம் ஆண்டுக்குள், 200 தரை தளங்கள், மற்றும் 100 விமானங்கள் என்ற இலக்கை அடைய, கடலோரக் காவல் படை தயாராக உள்ளது. 1977ஆம் ஆண்டு பிப்ரவரி 1ஆம் தேதி உருவாக்கப்பட்ட இந்திய கடலோரக் காவல் படை, இந்தியாவில்

விரிவடைந்து வரும் கடல்சார் நலன்களை பாதுகாக்க திட்டமிடப்பட்டதாகும். கடலோரப் பாதுகாப்பு, தேடுதல், மற்றும், மீட்பு, கடல் சுற்றுச் சூழல் பாதுகாப்பு, மற்றும், மிதமான உதவி, ஆகியவற்றை மேற்கொண்டு வருகிறது. இந்திய கடலோரக் காவல் படை, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கப்பல்கள், விமானங்கள், ஹெலிகாப்டர்கள், மற்றும், மேம்பட்ட கண்காணிப்பு அமைப்புகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், தன்னிறைவை நோக்கிய தனது நிலையான பயணத்தை தொடர்கிறது.

---------------------------------------